1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமைகளைச் சொல்கிறார்கள். இப்போது அந்த நிலைமைகள் மாற்றப்பட்டு, இப்போது போட்டி மனப்பான்மை குறைக்கப்பட்டு ஓரளவிற்கு நல்ல முறையிலே இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் போக்குவரத்து கழகத்திற்கு லாபம் வரவேண்டுமானால் நிச்சயமாக அந்த போட்டி மனப்பான்மை நல்லது என்றுகூட நான் கருதுகிறேன்.

திரு. எ. இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற போது சொன்னார்கள். 30 கிலோ மீட்டருக்குள் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் நெருக்கடியாக அவதிப்படுகின்ற பெருநகரங்களிலே 30 கிலோ மீட்டருக்கு உள்ளே இருந்தாலும் வருங்காலத்திலாவது கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு உண்டா? பொதுமக்களுக்கு நன்மை தருவதிலே என்ன ஆட்சேபணை இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கும் அந்த ஆட்சேபணை இல்லை நான் ஏற்கனவே சொன்னேன், எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ, அங்கே எல்லாம் கட்டாயம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணத்தால்தான் இன்றையதினம் அரசாங்கப் பேருந்துகள் 4,000த்திலிருந்து 8,100–க்கு உயர்ந்திருக்கிறது, எனவே நகரப் பேருந்துகளை 30 கி. மீ. வரை ஓட்ட வேண்டுமென்று சட்டம் இல்லை என்றாலும், தேவை இருக்கிறது என்று சொன்னால். 30 கி. மீ. வரை நீட்டிக்கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அரசு கால்நடைப் பண்ணைகளில் கன்றுகள் வளர்க்கும் திட்டம்.

வினா எண். 190 : டாக்டர் கே. பி. இராமலிங்கம் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கால்நடைப் பண்ணைகளில் கால்நடை வளர்க்கும் திட்டத்தை தீவிரமாக அமுல்படுத்தி சினைக்கிடாரி களை சிறு விவசாயிகளுக்கு நியாய விலையில் தரும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை இடங்களில் கால்நடைப் பண்ணைகள் புதியதாக துவங்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை புதிதாக வேறு இடங்களில் துவங்கும் உத்தேசம் தற்போது இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத்தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழக அரசு இந்த இரண்டுப் பண்ணைகளில் மட்டும் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாடு அரசு வங்கிகளின் உதவியோடு சிறு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் சுமார் 70 ஆயிரம் மாடுகளுக்கு கடன் உதவி அளிக்கப்படுகிறது. ஆகவே குறைந்த பட்சம் ஆண்டு ஒன்றுக்கு 70 ஆயிரம் மாடுகளை உற்பத்தி செய்து உருவாக்குவதற்காக ஒரு மிகப் பெரிய திட்டம் ஒன்றினை மாவட்ட அளவில் அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அடிப்படையில் மாவட்டந் தோறும் கால்நடைப் பண்ணைகளை அரசு அமைக்கும் உத்தேசம் இப்போது இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலித்து எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் போன்ற மாவட்டங்களில் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய அலுவலர்கள் மற்றைய பொருள்கள் எல்லாம் வாங்கி இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. நிதிநிலைமையையும் நாம் பார்க்க வேண்டும். ஆகவே நிதி நிலைமை நமக்கு ஒத்து வந்தால் இந்தத் திட்டத்தை எல்லாப் பண்ணைகளிலும் அமைக்கும் உத்தேசத்தை அரசு மேற்கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும் போது இந்த சினைக் கிடாரிகளைச் சிறிய விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கொடுக்கிற திட்டம் அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். இதுவரை 1980-81, மற்றும் 1981-82-ஆம் ஆண்டுகளில் எத்தனைக் கிடாரிக் கன்றுகள் இந்தச் சிறிய விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, 80–81 ஆம் ஆண்டு, 19.72 லட்ச ரூபாய் செலவில் புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 40 கலப்பினக் கன்றுகளை வாங்கி வளர்த்து அது நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்திலுள்ள ஏழை விவசாயிகளுக்கு லாப நஷ்டம் இல்லாத அளவில் இந்தத் திட்டத்தின் வாயிலாக 28 மாதங்கள் கால்நடைப் பண்ணைகளில் வளர்த்து அவர்களுக்கு விநியோகம் செய்து கொண்டு வருகிறோம்.

கால்நடை கூட்டுறவுச் சங்கங்களில் தொற்றுநோய் தடுப்புப் பணிகளைக் கவனிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்.

வினா எண். 191. திரு. செ. செம்மலை : மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது தொற்று நோய்த் தடுப்புப் பணிகளை கவனிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன?

(முற்பகல் 10. 10)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 587 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களில் ஒரு சங்கத்திற்கு ஒரு ஆய்வாளர் வீதம் 5 சங்கங்களுக்கு மட்டும் ஆய்வாளர்கள் பணியாற்றி, அங்கத்தினர்களின் ஆடுகளுக்கு தொற்றுநோய் தடுப்புப் பணிகளை கவனித்து வருகிறார்கள். 39 சங்கங்களில் மூன்று சங்கங்களுக்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் என்ற வீதம் நியமிக்கப்பட்டு தொற்று நோய் தடுப்புப் பணிகளை கவனித்து வருகிறார். இச்சங்கங்கள் வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவி பெற்றவை. இதர கால்நடை வளர்ப்புச் சங்கங்களில் உள்ள எல்லா ஆடுகளுக்கும், பொதுவாக எல்லா ஆடுகளுக்கும், பொதுவாக எல்லா கூட்டுறவு சங்கங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கும், அவற்றின் அருகாமையிலுள்ள கால்நடை மருந்தகங்கள் மூலம் தொற்று நோய் தடுப்புப் பணிகளை கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொற்று நோயால் திடீரென்று பாதிக்கப்பட்டு கால்நடைகள் இறந்துவிடுவதால், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன்பெற்று, கால்நடைகளை வாங்கிய கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு பெரிதும் இழப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க அனைத்து ஒன்றியங்களிலும் நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்த அரசு பரிசிலிக்குமா?